www.Padasalai.Net

**கல்லூரிக் கல்வித் துறை**

அனுப்புநர்
எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி ஆணையர் ,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை–600 015

பெறுநர்
இயக்குநர்,
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை,
சென்னை – 600 009.

ந.க.எண்: 24079/எம்1/2024–3 நாள்: 23.11.2024

அய்யா,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 2024–25 ஆம் கல்வியாண்டிற்கான – அரசு கல்வியியல் கல்லூரிகளில் முதுநிலை மாணாக்கர் சேர்க்கை – இணைய வழி விண்ணப்ப பதிவு துவக்கம்– தொடர்பாக

பார்வை : கல்லூரிக் கல்வி ஆணையரின் அறிவிப்பு.

-----

தமிழ்நாட்டில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரிகளில் 2024–2025 ஆம் கல்வியாண்டில் முதுநிலை கல்வியியல் பட்டப்படிப்பில் (M.Ed Post Graduate Course) சேர்ந்து பயில மாணாக்கர்கள் இணையதள வழியாக விண்ணப்பிக்க ஏதுவாக, இணையதள விண்ணப்பப் பதிவு 23/11/2024 அன்று துவங்குகிறது. இப்பொருள் தொடர்பாக பார்வையில் காணும் செய்திக்குறிப்பினை இக்கடிதத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

இச்செய்திக் குறிப்பினை மின்னனு மற்றும் செய்தி ஊடகங்களின் வாயிலாக மாணாக்கர்கள் நலன் கருதி, தமிழகம் . முழுமையும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கல்லூரிக் கல்வி ஆணையர்**

**இணைப்பு – கல்லூரிக் கல்வி ஆணையரின் அறிவிப்பு**

www.Padasalai.Net

**கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 015,**

**தமிழ்நாடு அரசு கல்வியியல் கல்லூரி**

**மாணாக்கர் சேர்க்கை**

**முதுநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (M.Ed Post Graduate Course)**

**சேர்க்கை : 2024–2025**

**அறிவிப்பு**

தமிழ்நாட்டில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரிகளில் முதுநிலை கல்வியியல் பட்டப்படிப்பு(M.Ed) முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் **www.tngasa.in** என்ற இணையதள முகவரியில் 23/11/2024 முதல் பதிவு செய்யலாம். மாணாக்கர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விருப்ப வரிசைப்படி கல்லூரிகளை தெரிவு செய்தல் வேண்டும். இது தொடர்பான கூடுதல் விவரங்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| விண்ணப்பக் கட்டண விவரம் | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம்<br>ஒரு கல்லூரிக்கு – ரூ.58/–<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/– மட்டும் | SC/SCA/ST பிரிவினருக்கு<br>விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/– மட்டும் |

**கட்டணம் செலுத்தும் முறை :** விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card/ CreditCard/ NetBanking/ UPI மூலம் இணையதளம் வாயிலாக செலுத்தலாம். இணையதளம் வாயிலாக கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரிச் சேர்க்கை உதவி மையங்களில் "The Commissioner, Directorate of Collegiate Education, Chennai – 15" என்ற பெயரில் 23/11/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை மூலமாக அல்லது நேரடியாகச் செலுத்தலாம். மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மேற்குறித்த இணையதளம் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யத் துவங்கும் நாள் : 23/11/2024
இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் : 29/11/2024.

தொடர்பு எண்: 044 – 24343106/24342911

**கல்லூரிக் கல்வி ஆணையர்**

www.Padasalai.Net

# கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-15

அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட். பாடப்பிரிவுகளுக்கு 2024-25ஆம் கல்வி ஆண்டில் மாணாக்கர் சேர்க்கை தொடர்பாக இணையவழி விண்ணப்பித்தல் மற்றும் சேர்க்கை கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி நடைபெறவுள்ளது.

| | **கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை** | **6** |
|---|---|---|
| 1 | எம்.எட். இணையவழி பதிவேற்றம் துவங்கும் நாள் | 23.11.2024 |
| 2 | எம்.எட். இணையவழி பதிவேற்றம் இறுதி நாள் | 29.11.2024 |
| 3 | எம்.எட். தரவரிசைப் பட்டியல் வெளியிடும் நாள் | 30.11.2024 |
| 4 | எம்.எட். மாணாக்கர் சேர்க்கை துவங்கும் நாள் | 03.12.2024 |
| 5 | எம்.எட். மாணாக்கர் சேர்க்கை முடிவுறும் நாள் | 04.12.2024 |
| 6 | எம்.எட். முதலாம் ஆண்டு வகுப்புகள் துவங்கும் நாள் | 09.12.2024 |